**தலைப்பு 123 – வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின், வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 123 – வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 10 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

-----------------------------------------------------

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகளை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கி காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார்கள் என்பது அவதானிக்கப்பட்டது. ஒழுங்கு விதிகளுக்கு இணங்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை. | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | | |
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். (திணைக்களத்தின் நடவடிக்கைகளை நிதி மற்றும் திணைக்களத்தின் கட்டளைகளுக்கு இணங்கிய வகையில் மட்டுமல்லாது அரசாங்க கடமைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட நேர்மையுடன் நடைபெறல் வேண்டும் | | பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை. | 2.6 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. | முகாமைத்துவ குறைபாடுகள் | 2.3 |
| | | 2. | இணக்கமின்மைகள் | 2.7 |
| | | 3. | மனித வள முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.8 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையிலும் அமைச்சின் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 1. | செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடுதல் | 2.1 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | | அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்களை உச்ச வினைதிறனுடன் பயன்படுத்தாமை | 2.3 |

| | | | |
|---|---|---|---|
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பிற்கு வெளியே காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை கூடுதல் கவனத்துடன் செயற்பாட்டு அமைச்சின் பரிசோதனைக்கு உட்படுத்துதல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் | 2.5 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 உள்நாட்டு நிதிகள் ஈடுபடுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

(அ) மீளாய்வாண்டின் போது 08 நானாவித செயற்திட்டங்களின் கீழ் ரூபா 3,234 மில்லியன் மதிப்பீட்டு கிரயமான 15,836 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 8233 வீடுகள் மாத்திரமே உள்ளபடியாக நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இந்த 08 செயற்திட்டங்களின் கீழ் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 2,727 மில்லியனாக இருந்ததுடன் செயற்திட்டங்களின் பௌதீக செயல்முன்னேற்றம் 08 சதவீதத்திலிருந்து 97 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) செயற்திட்டங்களின் ஒரு பகுதியை மாத்திரம் பூர்த்திசெய்து முடிவுறுத்துதல்**

**தொடர்ச்சியான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்**

**(i) மாதிரிக் கிராம நிகழ்ச்சித்திட்டம்**

2016 சனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2017 மார்ச் மாதத்தில் முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 1,388 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட வீடுகளின் அளவான 4,382 வீடுகளில் 2,054 வீடுகளுக்கு மாத்திரம் வேலை முடிவுறுத்தப்பட்டிருந்தது. கூரைகள் பூர்த்தியாக்கப்பட்ட 2,207 வீடுகளும் கூரை மட்டம் வரை நிர்மாணிக்கப்பட்ட 114 வீடுகளும் காணப்பட்டன. எவ்வாறாயினும், நீர், வீதி ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் முறையாக இருக்கவில்லை. வீடுகளின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு அக்கறையில்லாத வீடுகளுக்காக வழங்கப்பட்ட கடன் பணம் மட்டுப்படுத்தப்பட்டு செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**(ii) பரவலான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்**

2016 ஆம் ஆண்டின் சனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2017 மார்ச் மாதம் முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 4,302 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட வீடுகளின் அளவான 16,950 வீடுகளில் 15,032 வீடுகள் மாத்திரம் வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருந்தன. கூரை வரை நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட 614 வீடுகளும் கூரை மட்டத்திற்கு நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட 15 வீடுகளும் காணப்பட்டன. வீடுகளின் வேலைகளை முடிவுறுத்துவதற்கு அக்கறை காட்டாத நலன்பெறுநர்களுக்கு வீடுகளுக்காக வழங்கப்படுகின்ற கடன் பணம் மட்டுப்படுத்தப்பட்டு நிகழ்ச்சித்திட்டம் முடிவுறுத்தப்பட்டுள்ளன, என்பது அவதானிக்கப்பட்டது.

**(iii) செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்படாமை.**

**வெலி ஓயா வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்**

2016 ஆம் ஆண்டின் சனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2017 மார்ச் மாதம் முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட இவ் வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக ரூபா 368 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் இலக்கிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையான 1,042 வீடுகளில் 995 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் கூரைவரை பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள் 47 ஆக இருந்தன. செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தும் போது பிரதேசத்தில் நீர் போன்ற இயற்கை காரணிகள் பற்றி முறைப்படியாக ஆய்வு செய்து அது தொடர்பாக ஆராய்ந்து பார்க்காது செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தியதன் காரணமாக பிரதேசத்தில் காணப்பட்ட நீர்த்தட்டுப்பாட்டின் காரணமாக பல நலன் பெறுனர்கள் குடியிருக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

ஒரு ஜீப் வண்டி 2016 யூன் மாதத்திலிருந்து 2017 பெப்ரவரி மாதம் வரை 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் பயன்படுத்தப்படாது நிறுத்தி வைக்கப்பட்டு விளைவற்றுக் காணப்பட்டது.

## 2.3 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பு மாவட்டத்தில் பணத்தை செலுத்தி முடிவுறுத்தியுள்ள வீட்டுரிமையாளர்களுக்கு / காணி உரிமையாளர்களுக்கு உறுதிகளை வழங்குதல் 01 ஆண்டிலிருந்து 33 ஆண்டுகள் வரையான காலம் தாமதமடைந்திருந்தது.

(ஆ) குத்தகை வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள மாடி வீடுகள் / தனி வீடுகளின் உறுதியை மாற்றுதல் செய்யும் உரிமையை ஒப்படைக்கும் போது உரிய வீடுகளின் பெறுமதியானது வீடுகளில் குத்தகை வாடகை அடிப்படையில்

குடியிருந்த திகதிகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 24 ஆண்டுகளிலிருந்து 43 ஆண்டுகள் வரையான காலத்திற்குரிய விலைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த 2002/தெ.கள/01 ஆம் இலக்க 2002 சனவரி 16 ஆந் திகதிய தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளரது சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஒரே தடவையில் பணத்தை செலுத்தும் போது மேலும் 50 சதவீதத்திலிருந்து 95 சதவீதம் வரையான வீச்சுடைய கழிவுடனான குறைந்த விலைக்கு இவ்வீடுகள் வழங்கப்பட்டுள்ளமையானது தெரிவுக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(இ) மேலே குறிப்பிடப்பட்ட 2002/தெ.கள/01 ஆம் இலக்க 2002 சனவரி 16 ஆந் திகதிய சுற்றறிக்கைக்கு முரணாக வீடுகளின் உறுதிகளை மாற்றுதல் செய்யும் உரிமையை ஒப்படைக்கும் போது 04 வீடுகள் தொடர்பாக வழங்கப்பட வேண்டிய சதவீதத்தினை விட 10 சதவீதத்திற்கு மிகையான சதவீத கழிவு வழங்கப்பட்டதன் காரணமாக வீட்டு நலனாளிகளிடமிருந்து ரூபா 385,000 குறைத்து அறவீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.7 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்துள் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்களும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| 2013 | மீண்டுவருபவை | 311.26 | 289.80 | 21.46 | 6.89 |
| | மூலதனம் | 2,730.88 | 2,211.84 | 519.04 | 19.01 |
| | **மொத்தம்** | **3,042.14** | **2,501.64** | **540.50** | **17.77** |
| 2014 | மீண்டுவருபவை | 343.41 | 328.40 | 15.01 | 4.37 |
| | மூலதனம் | 4,296.39 | 2,994.80 | 1,301.59 | 30.29 |
| | **மொத்தம்** | **4,639.80** | **3,323.20** | 1,316.60 | **28.38** |
| 2015 | மீண்டுவருபவை | 643.19 | 628.68 | 14.51 | 2.25 |
| | மூலதனம் | 5,716.69 | 5,691.11 | 25.58 | 0.45 |
| | **மொத்தம்** | **6,359.88** | **6,319.79** | **40.09** | **0.63** |
| 2016 | மீண்டுவருபவை | 1,208.33 | 1,176.31 | 32.02 | 2.64 |
| | மூலதனம் | 6,594.75 | 6,556.12 | 38.62 | 0.58 |
| | **மொத்தம்** | **7,803.08** | **7,732.43** | **70.64** | **0.90** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2017 | மீண்டுவருபவை | 683.98 | 681.82 | 2.15 | 0.31 |
| | மூலதனம் | 6,849.15 | 6,849.15 | 0.00 | 0.00 |
| | **மொத்தம்** | **7,533.13** | **7,530.97** | **2.15** | **0.03** |

## 2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 12301 ஆம் விடய இலக்கததின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| **செலவு** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** | **இழிவு எல்லை** | **உள்ளபடியானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 11.00 | 10.96 | 5.50 | 8.20 | 45.00 | 26.35 |

வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டியுள்ள ரூபா 199,460 கடன் மீதி 01 ஆண்டு 06 மாதங்கள் கடந்திருந்தும் அம்மீதிகளை அறவீடு செய்வதற்கு அமைச்சிற்கு முடியாதிருந்தது.

## 2.6 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே தரப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| **பதிவேட்டின் வகை** | **உரிய பிரமாணம்** |
|---|---|
| கணனி, துணைக்கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றிக்கை |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |

**2.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஒழுங்கு விதிகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| **அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை** | |
| 5.4.12 ஆம் வழிகாட்டிகள் | பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவு தொடர்பான விபரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 2016 சனவரி 01 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 06(1),(ii) மற்றும் 07 ஆம் பந்திகள் | சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டின் இறுதியில் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் காலாண்டின் போது புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட வாகனங்கள், வாகனங்களை விற்றுத் தீர்த்தல்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய மாற்றங்கள் தொடர்பான தகவல்கள் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

**2.12 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**(அ) இணைத்துக்கொள்ளப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவுகள்**

அமைச்சின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதனச் செலவுத் தொகுதிக்காக ரூபா 110 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க தனிநபருக்கான செலவு ரூபா 754,240 ஆகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரத்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடமான பதவியணியினர் |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 27 | 18 | 09 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 06 | 03 | 03 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 106 | 78 | 28 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 52 | 44 | 08 |
| (v) | ஏனையவை | 03 | 03 | - |
| | **மொத்தம்** | **194** | **146** | **48** |

(ஆ) இந்த அமைச்சில் 48 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக அரசாங்க, பொறியியல் கூட்டுத்தாபனம், அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய நிறுவனங்களிடமிருந்து சம்பளம் செலுத்தப்படுகின்ற 23 உத்தியோகத்தர்கள் 2007 திசெம்பர் மாதத்திலிருந்து 2017 திசெம்பர் வரையான காலத்தின் போது அவ்வப்போது அமைச்சின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அமைச்சில் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அமைச்சினால் சம்பளம் செலுத்தப்படுகின்ற ஒரு உத்தியோகத்தர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கடமைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்தனர்.